விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 பங்குனி 5 ஜ. ஆகிர் 3 இதழ் 37

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19—3—83

## தீவுப்பகுதியில் மூளைமலேரியா நோய் ஆபத்து!

(வேலணை நிருபர் ஆர். சற்குருநாதன்)

தீவுப்பகுதியில் மூளை மலேரியா நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை அல்லைப்பிட்டி, வேலணை, சரவணைப் பகுதிகளில் சிலருக்கு இந்நோய் பீடித்திருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மலேரியா நோய் தடைப் பகுதி வைத்திய அதிகாரி கே. சிவகுரு, சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தமது ஊழியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மூளை மலேரியா நோய், மூளைக்காய்ச்சலை விட மிகவும் கடுமையானதென்றும் இது தொற்றுத இருப்பதற்கு மலேரியாத்தடுப்புநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் வைத்தியநிபுணர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

## ரூ. 75 லட்சம் செலவில் பாரதி நினைவாலயம்

(சென்னை)

சென்னை மரினா கடற்கரையில் பாரதி நினைவாலயம் 75 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாக தமிழ்நாடு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் தமிழக சட்டப் பேரவையில் நேற்றுத் தெரிவித்தார்.

# "அரசுடன் பேச்சு நடத்தியும் ஒன்றுகூட நடக்கவில்லை!"

## பாராளுமன்றத்தில் 'அமிர்' கண்டனம்!

### "தமிழர் பிரச்னை என்றால் அரசு நத்தைவேகம்; தமிழ் இளைஞர் என்றால் 'ஜெட்' வேகம்!"

(இ. கந்தசாமி)

"எமது பிரச்னைகளைக் கௌரவமான முறையில் தீர்த்து வைக்கவே நாம் விரும்புகின்றோம். அதன் அடிப்படையில்தான் அரசுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தினோம். ஆனாலும் ஒருவருடமாக பேச்சுக்கள் நடத்தியபோதிலும் ஒன்றுமே நடக்கவில்லை"! என்று எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் கண்டனம் தெரிவித்தார்.

வரவு செலவு திட்டத்தின் மீதானவிவாவதத்தைமுடித்து வைத்து உரையாற்றுகையில் தான் திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"பேச்சுக்கள் மூலம் கௌரவமான முறையில் நமது பிரச்னைகளைத் தீர்த்து வைக்க நாம் தயாராகவுள்ளோம். ஆனால், தீர்வு எழுத்தில் மட்டும் இருந்தால் போதாது. செயல் படக்கூடிய முறையில் அவை அமைய வேண்டும்.

"நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் முதலில் அரசியல் தீர்வு வேண்டும்.

"தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கும் நடவடிக்கை என்றால் அரசு நத்தை வேகத்தில் செல்கிறது ஆனால் வன்முறைக்கு எதிராக தமிழ் இளைஞர்கள்மீது நடவடிக்கை எடுப்பதென்றால் அரசு 'ஜெட்' வேகத்தில் செல்கிறது.

(8-ம்பக்கம் பார்க்க)

## "புதிய பாராளுமன்றத்தின் மாத மின் கட்டணம் ரூ. 5 லட்சத்து 60,000!"

(கொழும்பு)

"1977-ம் ஆண்டு தேர்தலில் தமிழ்மக்கள் பிரச்னையை தீர்ப்பதாகக்கூறி பதவிக்கு வந்த அரசு பிரச்னைகளைத் தீர்க்கவில்லை. தமிழ் ஈழப் பிரச்னை இதனால் தான் எழுந்தது. எமது குறிக்கோள் நிறைவேறும்வரை தொடர்ந்து போராடுவோம்"

பாராளுமன்றத்தில் 'பட்ஜட்' விவாதத்தில் பேசிய மானிப்பாய் எம். பி. திரு. வி. தருமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

### சபையில் தர்மர்

அவர் தொடர்ந்து கூறியதாவது: 'மதுவுக்கு அடிமை

(8ம் பக்கம் பார்க்க)

## இலவச மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வட்டாரக்கல்வி வள நிலையமும் யாழ் றொட்டரிக்கழகமும் இணைந்து புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரியில் நாளை காலை இலவச

[8ம் பக்கம் பார்க்க]

## "தேசியக் கட்சியொன்றில் சேர்ந்து நாட்டுக்கு உழையுங்கள்!"

### தமிழர்கூட்டணி எம். பிக்களுக்கு பிரதமர் அழைப்பு

(கொழும்பு)

"வட்டுக்கோட்டை புதிய எம். பி. திரு. நீலன் திருச்செல்வம் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் எல்லோரும் திறமைசாலிகள். அவர்கள் பிரதேசக் கட்சியில் இருப்பதால் பயனில்லை. கூட்டணியினர் எங்களுடன் அல்லது வேறு ஒரு தேசியக் கட்சியுடன் சேர்ந்து நாட்டிற்காக உழைக்கவேண்டும்."

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது பேசிய பிரதமர் ஆர். பிரேமதாசா நேற்று மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

பிரதமர் ஆர். பிரேமதாசா மேலும் பேசுகையில் கூறியதாவது: திரு. நீலன் திருச்செல்வம் வட்டுக்கோட்டை எம். பி யாக வந்தது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

அவர் 'பட்ஜட்'தினத்தன்று வந்து சத்தியப்பிரமாணம் செய்துகொண்டது 'பட்ஜட்'டுக்கு ஒரு நல்ல சகுனமாகும். அவரது தந்தை அமரர் திருச்செல்வம் மந்திரியாக இருந்த போது நான் அவருக்கு உதவி மந்திரியாக இருந்தேன். அமரர் திருச்செல்வம் சட்டத்திற்கும், அரசியலுக்கும் சிறந்த சேவையாற்றியுள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பட்ஜட் நிறைவேறியது

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு 104 அதிகப்படியான வாக்குகளால் நேற்று இரவு பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

ஆதரவாக 117 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் கிடைத்தன. (இ)

## ஆனையிறவுப் பற்றைக்குள் இளைஞரது சடலம்!

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுத் தடைமுகாமிலிருந்து சுமார் கால்மைல் தூரத்திலுள்ள பற்றைக்குள் கிடந்த இனந்தெரியாத இளைஞர் ஒருவரது சடலம் பெருந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நீண்ட வெள்ளைச் சால் சட்டையும், வெள்ளை ஷேர்ட்டும் அணிந்திருந்தநிலையில் இறந்து கிடந்த இந்த இளைஞருக்கு 25 வயது இருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்சடலத்தின் நாக்குவெளியில் தள்ளப்பட்டிருப்பதால் கழுத்து நெரிக்கப்பட்டு இறந்திருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர். (மா)

## சென் ஜோன்ஸ் : 171 — சென். பற்றிக்ஸ் : 148

## மத்திய கல்லூரி : 2-154 — யாழ்ப்பாணக் கல்லூரி : 5-41

[விளையாட்டுநிருபர் தேவா]

யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். பரியோவான் (சென். ஜோன்ஸ்) கல்லூரிக்குமிடையில் நேற்று காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான 85வது கிரிக்கெட் போட்டியின் ஸ்கோர் விபரம் வருமாறு:

முதலில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 171 ஓட்டங்களைப்பெற்றது. அதன் பின் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி நேற்றைய ஆட்டமுடிவு நேரம்வரை இரண்டு விக்கெட் நஷ்டத்துக்கு 154 ஓட்டங்களைப்பெற்றது. ஆட்டம் இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

### சென்பற்றிக்ஸ்-யாழ்ப்பாணக்கல்லூரி

சென்பற்றிக்ஸ்கல்லூரிக்கும், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் 66வது கிரிக்கெட் போட்டி சென்பற்றிக்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 148 ஓட்டங்களைப் பெற்றது.

அதன் பின்னர், துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி நேற்றைய ஆட்ட இறுதிநேரம் வரை 5 விக்கெட் நஷ்டத்துக்கு 41 ஓட்டங்களையே பெற்றது.

இன்று காலை தொடர்ந்து இப்போட்டி நடைபெறும்.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

100 வீதம் மறு சீரமைக்கப்பட்ட HONDA – C – 90 1979–ம் ஆண்டு மொடல் மோட்டார் சைக்கிள் மிகச்சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. விசேஷ விலைக்கழிவு கொடுக்கப்படும். தொடர்புகொள்க: N. சுசந்தராஜா இல. 3, கோவில் வீதி, (வேதக்கோவில் அருகில்), நுணுவில் மேற்கு. நுணுவில், சாவகச்சேரி. (6552)

மஸிபேர்குசன் ட்றக்டர் 36 ஸ்ரீ 6108 (Messy Fuguson Tractor) பெட்டி கலப்பை, டிஸ் உட்பட உடன் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தேவையாயின் வங்கிக்கடன் வசதி செய்துதரப்படும். மாணிக்கம் பயஸ் சாவிஸ், பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கை, கோப்பாய் தெற்கு. கோப்பாய். (6559)

விடோ தியேட்டருக்கு அருகாமையில் ஸ்ரான்லி றோட்டில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ரதி வோச் வேக்ஸ், 44, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 6581

பாவனையிலுள்ள M M.M. கடைச்சல் இயந்திரம் [Lathe Machine] பெட் நீளம் 1950 M. M. விற்பனைக்குண்டு விலாசம்: புதிய நம்பர்: 138, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 6568

### விற்பனைக்கு

தெல்லிப்பழையில் பார்மணியம் வீதியில் நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு A. Rasanayagam, Fisheries Training Centre, Negombo. 6561

காணிகள், தோட்டங்கள், வீடுகள், விற்கவும், வாங்கவும், அபிவிருத்தி செய்யவும் உங்களுக்கு உதவ உள்ளோம். Business Consultants & Promoters Ltd, 222, Hospital Road, Jaffna. 6578

### தேவை

யாழ்ப்பாண சிறந்த வேளாள குலத்தைச் சேர்ந்த ரூபா 2000/– மாச வருமானமுள்ள அரசாங்க உத்தியோகத்தரான 27 வயதுடைய மணமகனுக்கு இதே இனத்தைச் சேர்ந்த நல்ல சீதனத்துடன் அழகுள்ள மணப்பெண் தேவை. விண்ணப்பிக்க: விளம்பர இல:6571 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 6571

யாழ்ப்பாணத்தில் இருக்கும் சில Projectகளுக்கு Working Directorsஉடனடியாகதேவை. Salary Negotiable Business Consultants & Promoters Ltd, 222, Hospital Road, Jaffna. 6579

### விற்பனைக்கு

24 பரப்புக் காணி, கைதடி நுணுவிலில், கண்டி றோட்டில் இருந்து 300 யார் தூரத்தில், பண்டித் தலைச்சி அம்மன் கோவில் றோட்டில் றோட்டுக் கருகாமையில், உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ளவும். Dr.S. ஞானசம்பந்தர் சிவன்கோவில் லேன், சாவகச்சேரி. 6560

### வகுப்புகள்

கேக் ஐசிங், Hair Styles, பூக்கள் செய்தல், தையல் வேலை வகுப்புக்கள் ஆரம்பம்: 1–4–83. 141, ஆஸ்பத்திரிவீதி (வேம்படி சந்தி) யாழ்ப்பாணம் (சாப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு அருகாமையில்). 6584

'TOEFL' வகுப்புக்கள் Spoken English (Tape Lessons 3 மாத பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம். நேரில் தொடர்பு கொள்ளவும். யோ. பிலிப்பையா, மே/பா, விக்ரோ மகேந்திரா, 5, (17) கோவில் வீதி, யாழ்ப்பாணம். 6580

சுன்னாகம்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
சுன்னாகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தினால் நடாத்தப்படும் நெல் குற்றும் அரிசி ஆலையில் வேலை செய்ய கூலிக்கு கூறு விலைகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர், கேள்விப் பத்திரங்களை சங்கக் காரியாலயத்தில் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 31–3–83வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்,

சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
17–3–83 6585

வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு
**26% தொடக்கம் 30% வரை**
வட்டி கொடுக்கப்படும்.
குறைந்த தொகை ரூபா 1000/-
எந்த நேரமும் அறிவித்தலின் பின்
முழுப் பணத்தையும் திருப்பிப் பெறலாம்
விபரங்களுக்கு:
**யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் லிமிற்.**
3, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன்: 23698

**பழைய அச்செழுத்துதேவை**
பழைய ஈய அச்செழுத்துக்கள் தேவைப்படுகின்றன. நியாயமான விலையில் எவ்வளவு நிறை கொண்ட எழுத்துக்களும் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;-
அதிபர்,
**புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,**
360, பிரதான வீதி - யாழ்ப்பாணம்
தொலைபேசி: (021) 22300
6567

புதிய
**"லக்ஸ்பிறே"**
இந்நாட்டில் எல்லோரும் விரும்பி சுவைக்கும்
பால் உணவு இப்பொழுது புதிய அழகான
500 கிறும் பக்கற்றுகளில் அடைக்கப்படுகிறது.
வியாபாரிகளே!
உங்கள் தேவையை நாம் உடனே பூர்த்தி செய்யத்
தயாராக இருக்கிறோம்.
யாழ், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு
உத்தரவு பெற்ற விநியோகத்தர்கள்:
**சிலோன் மேர்ச்சன்ஸ்**
**லிமிட்டெட்,**
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22134, 23819

## இராமோதயசபைத் தலைவர்



[யாழ்ப்பாணம்]

இருபாலை கிராமோதய சபைத் தலைவராக திரு. இ. வேலாயுதர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தின் தலைவராகப் பணியாற்றும் இவர், நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலின் பரிபாலன சபையின் உப தலைவரும், கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் உபதலைவரும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து இளைப்பாறிய ஆசிரியருமாவார்.

யாழ். மாவட்ட

## சனசமூகநிலைய ஒன்றியத்தின் கருத்தரங்கு

[அரியாலை]

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் சார்பில் புங்குடுதீவு சர்வோதய அலுவலகத்தில் ஒருநாள் கருத்தரங்கு ஒன்றியத்தின் தலைவர் திரு. வே. ப. வாரித்தம்பி தலைமையில் நடைபெறும்.

இந்தக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கு அழைப்புஅனுப்பப்பட்டுள்ளது. பழுதடைந்த நிலையங்களைத் திருத்தியமைத்தல், புதிய கட்டிடங்களைக் கட்டுவித்தல், பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் ஆகியன ஒன்றியத்தின் மூலம் கிடைக்க வழிசெய்தல், மின்சார இணைப்பு ஏற்படுத்தல், மின் கட்டணம் செலுத்தல் சம்பந்தமாக இக்கருத்தரங்கில் கலந்துரையாடப்படவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு, சனசமூக நிலை உத்தியோகத்தர் திரு. வி. கந்தசாமி, டாக்டர் முகாந்திரம் ஈ பி. இராசையா சனசமூக நிலைய ஒன்றியச் செயலாளர் திரு. எஸ். எம். வரதராசா ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். (க)

## வீதிகளில் நடமாட அஞ்சுகின்றனர்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை மயிலிட்டி போன்ற பகுதிகளில் அடிக்கடி இராணுவ தாக்குதல்கள் இடம் பெறுவதால் மக்கள் பீதியடைவதாக கூறப்படுகிறது.

வீதிவழியால் ரோந்து சுற்றி வரும் இராணுவத்தினர் வீதியால் வரும் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்துவதாகவும். 'ஜீப்பினால் மோதி விட்டு ஓடி விடுவதாகவும் கூறப்படுகிறது.

அடிக்கடி இடம் பெறும் இத்தாக்குதலால் இரவு நேரத்தில் வீதியில் நடமாட பொது மக்கள் அஞ்சுகின்றனர். (க)

## இருபது 'கஸட்' ரேப் றெக்கோடர்கள் சிக்கின!

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவில் வடக்கு வீதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து கடத்தல்பொருட்களெனச் சந்தேகிக்கப்படும் 20 கஸட் ரேப் றக்கோட்களை யாழ். மாவட்ட விசேஷ குற்றத்தடுப்புப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இரகசியத் தகவலொன்றின் பேரில், பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் என். கதிர்காமநாதன் தலைமையில் சார்ஜன்ட் எஸ். மாசிலாமணி, எட்வேட் ஆகியோர் கொண்ட கோஷ்டியினர் வீட்டின் உரிமையாளரைக் கைதுசெய்ததுடன் ரேப்றக்கோடர்களையும் கைப்பற்றி யாழ்.மாவட்ட சுங்க இலாகாவில் ஒப்படைத்துள்ளனர். விசாரணை நடைபெறுகிறது. [மா]

## பொங்கல் உற்சவம்

(ஒட்டுசுட்டான்)

புணியல் பொக்கணை நாக தம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இம் மாதம் 28-ம் திகதி நடைபெறும். வழமையை விட பெரும் தொகையான பக்தர்கள் இம்முறை கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

போக்குவரத்து, சுகாதாரம், பாதுகாப்பு போன்றவற்றிக்கு ஆலய பரிபாலன சபையினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

## யாழ்.மேல் நீதிமன்ற பதிவாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மேல் நீதிமன்ற பிரதி பதிவாளராக கடைமையாற்றிய திரு வி.சி.பரமநாதன் யாழ்.மேல் நீதிமன்றபதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மேல் நீதிமன்றப் பதிவாளராக இருந்த திரு பி.சத்தியசீலன்' கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நியமனம் வழங்கப்பட்டது.

திரு வி சி பரமநாதன், தவாலியூர் சி தம்பையா உபாத்தியாயரின் பேரனும், யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவருமாவர். [மா]

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 5–ம் திகதி

சனிக்கிழமை

(19—3—83)

மேடம்: வயிற்றுக் கோளாறு தோன்றக்கூடும், உணவு விசயத்தில் அதிக கவனம் செலுத்தவும், வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார்கள்.

இடபம்: சிரித்துப் பேசுபவர்கள் இன்று சீறி விழுவார்கள், உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும், சிலருக்கு பதவி கிடைக்காது.

மிதுனம்: போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள், எதிலும் நிறைவு தென்படும், எதிலும் நிறைவு தென்படும், முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்கு புதிய பாதையைக் காட்டும்.

கடகம்: எதிர்பார்த்த விடயம் இடையில் தடைப்படலாம், சிலர் வாழ்க்கையில் பிரச்சனைகள் உருவாகும், தானியத் துறையில் நஷ்டம் ஏற்படும்.

சிம்மம்: நிதியில் அபிவிருத்தி காணப்படுகிறது, கணவன் மனைவி உறவுமுறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும், புதிய வாகனம் வாங்க நன்மையான காலம்.

கன்னி: நேர்முகப் பரீட்சையில் இன்று வெற்றி கிடைக்கும், திரவிய லாபத்திற்கு இடமுண்டு, வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

துலாம்: நம்பிக்கைமோசடி நடக்கக் கூடும், நண்பர் ஒருவர் உமது காலை வாரிவிடுவதற்கு முயற்சி எடுப்பார்கள்,

[7ம் பக்கம் பார்க்க]

# நடுத்தரஏவுகணைகளைநிறுவும்திட்டத்தை உடன் நிறுத்துக!

## அமெரிக்காவுக்கு சோவியத்யூனியன் எச்சரிக்கை

மாஸ்கோ, மார்ச், 18

ஐரோப்பாவில் நடுத்தர ஏவுகணைகளைத் தொடர்ந்தும் நிறுவிவரும் திட்டத்தை அமெரிக்கா நிறுத்தவேண்டுமென்று சோவியத் யூனியன் அமெரிக்காவை எச்சரித்துள்ளது.

அவ்வாறு அமெரிக்கா நடுத்தர ஏவுகணைகளைத் தொடர்ந்தும் ஐரோப்பாவில் நிலைநிறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால், சோவியத் யூனியன் ஐரோப்பாவில் மட்டுமன்றி அமெரிக்காவின் எல்லாப் பகுதிகளிலும் நடுத்தர ஏவுகணைகளை வைத்திருக்கவும், ஐரோப்பாவில் தொடர்ந்து நிறுவிவருவதற்கும் தயங்காது என்று சோவியத் யூனியன் இது தொடர்பாக மேலும்தெரிவித்துள்ளது.

அதேவேளை இப்பிரச்னை தொடர்பாக அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சுமுகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டுமென்று ஐ.நா. பொதுச் செயலாளர் திரு. பிரெஸ்டிகியூலர் இவ்விரு நாடுகளையும் கேட்டுள்ளார்.

மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்கா புதிய நடுத்தர ஏவுகணைகளை நிறுவி வருவது அணுவாயுதப் பரவலை ஊக்குவிப்பதாக அமையுமென்று சோவியத் யூனியன் குற்றம் சாட்டியுள்ளது. [வெ]

## வருடாந்தக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர வரியிறுப்பாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 28ம் திகதி காலை யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் தலைவர் திரு. சு. செ. மகாதேவா தலைமையில் நடைபெறவுள்ளது.

## எம். எல். ஏ. பிணையில் அனுமதி

சென்னை, மார்ச். 18

தனியார் லொறியொன்றை தடுத்து நிறுத்தியதன் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர் (எம். எல். ஏ.) திரு. கே. பி. நாச்சிமுத்து நேற்று பிணையில் செல்ல நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டார். (வெ)

# லெபனான் பிரச்னை: அமெரிக்கா புதியயோசனை!

வாஷிங்டன், மார்ச். 18

லெபனான் பிரச்னையைத் தீர்ப்பதற்கு புதியயோசனைகளை அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம்லெபனானிலிருந்து அந்நிய நாட்டுத்துருப்புகள் வாபஸ் பெறப்படவேண்டுமென்றும், இஸ்ரேலும்லெபனானும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென்றும் அமெரிக்கா யோசனை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இவ்யோசனைகள் லெபனானிற்குச்சாதகமாக அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். [வெ]

## இந்துசமுத்திரம்: அமெரிக்க சோவியத் அணுகுமுறை

### புதிய நூலில் பலதகவல்கள்

மாஸ்கோ, மார்ச், 18

இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவினதும் சோவியத் யூனியனதும் அணுகுமுறைகுறித்து ஆராயும் நூல் ஒன்று இங்கு வெளியாகியுள்ளது.

''இந்து சமுத்திரம்; நெருக்கடிகளின் கனமா? அல்லது சமாதானமண்டலமா?'' என்ற பெயரிலான இந்நூலை சோவியத்விஞ்ஞானப் பேரவையின் கீழைத் தேயவியல் கழகத்தில் கடமையாற்றும் பேராசிரியர் ஐ. ரெட்கோவும், உலகப்பொருளாதார சர்வதேச உறவு ஆய்வாளரான என். ஷாஸ்மொல்விகியும் எழுதியுள்ளனர்.

உலக அரங்கிலின்இந்து சமுத்திரம் எப்போதுமே முக்கிய இடத்தைப் பெற்றுவருகிறது. என்று குறிப்பிடும் இந்நூலாசிரியர்கள், பொதுவாக இந்து சமுத்திரமும், குறிப்பாக பாரசீகக்குடாவும் இன்று சமாதானத்துக்கும் புதிய உலக யுத்தத்தை தடுப்பதற்குமான போராட்டத்துடன் நெருக்கமாக இணைந்துள்ளது என்று வலியுறுத்துகின்றனர்,

இரண்டாவது உலக யுத்தம் தொடக்கம், அமெரிக்காவின் மிகப் பெரிய யுத்தக்கப்பல் அணிகள் இந்து சமுத்திரத்தில் நடமாடி வருவது குறித்து முதலாவது அத்தியாயம் விபரிக்கிறது, இந்த அணிகளில் ஏராளமான கப்பல்கள் உள்ளன. விமானந்தாங்கி கப்பல்களும் அணுவாயுதங்களைக் கொண்ட சில கப்பல்களும் அவற்றுள் அடக்கம்

இப்பகுதியில் அமெரிக்கா பின்னல் வலை போன்று இராணுவத் தளங்களை நிர்மாணித்துள்ளதற்கான இரு காரணங்களை 'நியூயோக் டைம்ஸ்' பத்திரிகையை ஆதாரமாகக் கொண்டு காட்டுகிறார்கள். இந்து சமுத்திரத்தில் அமெரிக்க கடற்படை நடமாட்டத்தை நிரந்தரமாக வைத்திருப்பதற்கான காரணம் அதிரடிப்படைகளை நிலப்பகுதிகளுக்கு அனுப்புவதற்கான ஒரு ஆதாரத்தை ஏற்படுத்துவதுமே'' என்று பல தகவல்களை நூலாசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளர்.

## நவீன சாதன கலங்கரை

புதுடில்லி, மார்ச். 18

ஆந்திர பிரதேசம், வங்காள கடலில் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட கலங்கரை விளக்குகள் அமைக்கப்படவுள்ளது. (வெ)

## அணிசேரா மாநாடு:

# அரச ஊழியர் சேவைக்கு இந்திரா பாராட்டு

புதுடில்லி, மார்ச், 18

புதுடில்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 7வது உச்சிமகாநாட்டின் போது கடமையாற்றிய அரசாங்க அதிகாரிகளுக்கு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி நேற்று வரவேற்புபசாரமொன்றை அளித்தார்.

இவ்வரவேற்புபசாரத்தின் போது அணிசேரா மாநாடு திறம்பட நடைபெறுவதற்கு உதவிய அரசாங்க ஊழியர்களின் சேவைகளைப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி பாராட்டிப் பேசினார்.

புதுடில்லியில் நடைபெற்ற அணிசேரா மாநாடு புதிய செய்தி, தகவல் தொடர்பு முறையைத் தோற்றுவித்துள்ளதாக மத்திய செய்தி, ஒலிபரப்பு மந்திரி திரு. எஸ், கே. பகத் இவ்வைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அணிசேரா இயக்கத்தை வலுப்படுத்த வேண்டுமென்றும் அவர் ஏனைய நாடுகளைக் கேட்டுக்கொண்டார். (வெ)

# எகிப்தும் எண்ணெய் விலையை குறைத்தது!

கெய்ரோ, மார்ச், 18

'ஒபெக்' நாடுகள் எண்ணெய் விலையைக் குறைத்ததையடுத்து எகிப்தும் எண்ணெய் விலையைக் குறைத்துள்ளது.

எகிப்து எண்ணெய் விலையை ஒரு பீப்பாவிற்கு 2 டாலர்களால் குறைத்துள்ளது. இதன் பிரகாரம் எகிப்தின் எண்ணெய் விலை ஒரு பீப்பாவிற்கு 27 டாலர்களாக இருக்குமென்று அறிவிக்கப்பட்டது.

'ஒபெக்' நாடுகள் எண்ணெய் விலையைக் குறைத்ததைத் தொடர்ந்து ஐரோப்பாவில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்தது தெரிந்ததே. (வெ)

## ஏழுபேர் கைது

சென்னை, மார்ச் 18

குடிநீரைப் பாசனத்திற்குத் திருப்பிவிட்ட குற்றச்சாட்டின் பேரில் நீலகிரி மாவட்டத்தில் ஏழுபேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். [வெ]

# அசாமில் சகஜநிலை!

புதுடில்லி, மார்ச். 18

அசாம் மாநிலத்தில் தற்போது சகஜநிலை ஏற்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இம்மாநிலத்தில் கடந்த பல தினங்களாக இடம் பெற்று வந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து முதலமைச்சர் பிரதம மந்திரி இந்திரா காந்தியுடனும், மத்திய உள்துறை அமைச்சர் திரு. சேத்தியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அசாமில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டோரில் 40,000 பேர் தற்போது தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளதாகவும் அசாம் மாநில முதலமைச்சர் தெரிவித்தார்.

அசாம் மாநிலத்தில் 1971ம் ஆண்டிலும், அதன் பின்னரும் வந்து குடியேறிய வெளிநாட்டுப் பிரஜைகள் தொடர்பாக இந்திய மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமென்று மத்திய உள் துறை அமைச்சர் திரு. சேத்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக விசாரணை நடத்த குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (வெ)

## பெண் கைதி மரணம்

### விசாரணை நடத்த கோரிக்கை

சென்னை, மார்ச். 18

சேலத்தில் றிமாண்டிலிருந்த பெண் கைதியொருவர் மரணமானது குறித்து விசாரணை செய்யுமாறு பல்வேறு அரசியல் கட்சிகளும் தமிழ்நாடு அரசை கேட்டுள்ளன. (வெ)

## வடபகுதி

# பயங்கரவாதிகளை மடக்க புதியபாதுகாப்புத் திட்டம்!

(கொழும்பு)

வடபகுதி குற்றச் செயல்களை முறியடித்து, குற்றவாளிகளைக் கைது செய்யும் வகையில் புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பாதுகாப்பமைச்சு ஏற்றுக் கொண்டு இதனை அமுல்படுத்துவதற்கு இரண்டு கோடி ரூபாவை செலவிட முன்வந்துள்ளது.

வடபிராந்திய பொலிஸ் உயர் மட்டமே இப்புதிய பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. யாழ். வலிகுடாப் பகுதியில் குற்றச் சம்பவங்களைப் புரிந்துவிட்டு கடல்மார்க்கமாகத் தப்பிச் செல்வோர், மற்றும் தலைமறைவாக இருப்போரை இலகுவில் கைது செய்யும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

அதிவேக ரோந்துப் படகுகள் தொலையேசி இணைப்புகளுடனான நவீன ரோந்து வாகனங்கள் என்பன இப்புதிய திட்டத்தில் பயன்படுத்தப்படவிருக்கின்றன. இவற்றுடன் விசேட பயிற்சிபெற்ற கலகமடக்கும் பொலிஸாரும் இத்திட்டத்தின்கீழ் பணியாற்றுவார்கள். (கி)

## வலிவடக்கில்

# மரவளங்கள் பற்றிய புள்ளிவிபரம் சேகரிப்பு

(மாவிட்டபுரம்)

வலி வடக்கில் மரவளங்கள் பற்றிய புள்ளி விபரங்களை சேகரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராம ரீதியாக தென்னை, பனை, வேம்பு போன்ற மரங்களின் தொகையும் அவற்றின் பயன்பாடுகளும் பற்றியே இந்த புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

புள்ளி விபரவியல் பகுதியினர் இந்த விபரங்களை சேகரித்து தருமாறு உதவி அரசாங்க அதிபரை கோரியிருந்தனர்,

இதற்கமைய வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் விசேட சேவை அலுவலர்களின் உதவியுடன் இவ்விபரங்களை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளார்.

கிராமிய வளங்களை ஆய்வு செய்து அதற்கமைய திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கே இந்த ஆய்வு மேற்கொள்ளப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## வவனியாவில் புத்தகக் கண்காட்சி

(வவனியா)

நூலகவார விழாவையொட்டி வவனியா பொதுநூலகத்தில் கடந்த புதன்கிழமை புத்தகக் கண்காட்சி இடம் பெற்றது.

புத்தகக் கண்காட்சியை வவனியா பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. பொ. சிவபாதம் சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார். நூலகம் தோரணங்களிலும், வாழை மரங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திறப்புவிழாவில் வவனியா நகரசபைத் தலைவர் திரு. ஐ. கேதீஸ்வரன். வவனியா அரச அதிபர் திரு. கே, ஸி. லோகேஸ்வரன், பொலிஸ் அத்தியட்சகர் திரு ஹேரத், வ. தெ. த பி. கூட்டுறவுச்சமாசத்தலைவர் திரு. ஞானப்பிரகாசம், வவனியா மாவட்டசபை ஐ. தே. கட்சி உறுப்பினர் டாக்டர் வி, பரராஜசிங்கம், நகர சபை உறுப்பினர்கள் உட்பட இங்குள்ள அரசாங்க திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

தத்துவம், நுண்கலைகள், சமூகவியல், சமயம், விஞ்ஞானம், இலக்கியங்கள், நாவல் புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தது.

## அரசியல்கட்சித் தலைவர்கள் உண்ணாவிரதம்

சென்னை, மார்ச், 18

தமிழ்நாட்டில் நிலவிவரும் வரட்சி, நீர், மின்சாரப்பற்றாக்குறை ஆகிய பிரச்னைகள் தொடர்பாக இந்திய மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டுசென்னையில் நேற்று ஒன்பது அரசியல் கட்சித்தலைவர்கள் உண்ணாவிரதமிருந்தனர். [வெ]

### மணிவாக்கு

பாக்கியவான்கள் என்போர் இன்பம் அளிப்பவரே. பிறரிடம் சச்சரவை நீக்கி, அமைதியை உண்டுபண்ணுபவர்கள்கூட பாக்கியவான்களே.

—பீச்சர்

# நமது நோக்கு

## இடைத்தேர்தல்

மாணுக்கர், முதல், இடை, கடை என்று பிரிக்கப்படுவது பழைய நாட்களின் சிறந்த மரபாகக் குறிப்பிட்டிருக்கிறது.

இன்றைய கல்வி ஆராய்ச்சி எவ்வாருக மாற்றம் அடைந்தபோதும் மாணவர்களின் இயற்கை விவேகம் இவ்வித பிரிவுக்கு என்றுமே இடமளிக்கும்.

ஜனநாயக ஆட்சியின் ஆணிவேர் பொதுத் தேர்தல். அதனை நன்ருகப் பரீட்சித்துப்பார்த்த நாடுகளில் இலங்கை ஒன்ருகும்.

அதுவும், நீண்டகாலம் காலனி ஆட்சியிலிருந்த நாடு ஒன்று பொதுத்தேர்தலில் போதிய நம்பிக்கை கொண்டு கடந்த 35 ஆண்டுகளில் பொதுமக்கள் தீர்ப்பு உருவாக்கிய கட்சி ஆட்சியின் பெருமை இலங்கைக்குப் பெரிதுமுண்டு.

இந்த உண்மையை இன்று ஆட்சியிலிருக்கும் ஐ. தே. கட்சி வற்புறுத்தியது போன்று வேறெந்தக் கட்சியோ ஆட்சியோ வற்புறுத்தவில்லை.

1983ம் ஆண்டு, சூரியன், சந்திரன், வானம் - இவை மறைந்தாலும், தங்கள் காலமுடிவில் உரிய நேரத்தில் பொதுத்தேர்தல் நடைபெறுமென்ற வாக்குறுதி அடிக்கடி நினைவூட்டப் பட்டது.

கடந்த ஆட்சி தங்கள் கால எல்லையை எவ்வித உரிமையுமின்றி சட்டத்திற்குமாருக, இரண்டு வருடம் நீடித்ததுபற்றிய கண்டனங்கள் இன்றுமே வெளிவருகின்றன.

இன்றைய ஆட்சி, இடைத் தேர்தலை ஒழித்தும், உரிய காலத்தில் பொதுத் தேர்தலை நடத்த முடிவு செய்யாது ''மக்கள் தீர்ப்பு'' என்ற முறையை அனுசரித்து மீண்டும் ஒருமுறை- ஆறு வருடங்களுக்குத் தொடர்ந்து ஆட்சிபுரிவதற்கு மக்கள் சம்மதம்பெற்றது. இது தேர்தல்முறை தேய்ந்துபோமோ என்ற அச்சத்தை உண்டாக்குவது இயல்பு. காலகதியில் தேர்தல்முறை மறைந்துவிடும் என்று கவலைகொள்பவரும் உண்டு.

அதிகாரம் ஒரு பயங்கரமான பண்டம். தாமிட்டது சட்டமென்று கொடுங்கோல் நடத்திய அரசர்களை இன்று வரலாற்றில்மட்டுமே காணலாம். ஆனால் அவர்களை ஒழிக்கப்பட்டபாடு சரித்திரத்தின் பெரு வெற்றிகளில் ஒன்ருகும்.

அதேபோன்று மக்கள் ஆட்சியிலும், மக்கள் பிரதிநிதிகள் தங்கள் ஆசனங்களை உரிய காலத்தில் தாமாகவே காலிசெய்வார்களாகில் அவர்கள் முதல் மாணுக்கர்கள் வரிசையில்வைத்து எண்ணப்படுவர். அவர்களின் இடத்துக்கு நடைபெறும் தேர்தல் முதற் தேர்தல் எனலாம். அதுவே பொதுத் தேர்தல் என்பது.

அதிகாரத்தின் நிர்ப்பந்தத்தில் ராஜினமாச் செய்பவர்களின் இடங்கள் தேர்தலில் நிரப்பப்பட்டால் அத் தேர்தல் 'இடைத்' தேர்தல் என்பதில் ஐயமில்லை.

இவ்விரண்டையும் தவிர்ந்த நியமனமுறை இன்று வழக்கிலிருக்கும் கட்சி நியமன முறை- உண்மையில் கடைத் தேர்தல் என்பதில் என்ன தவறுண்டு? பாராளுமன்ற ஆட்சி முறையின் 'பன்னுடை' என்றே வர்ணிப்பது பொருத்தமாகும்.

கட்சி அரசியல் செவ்வனே முன்னேற, மக்கள் ஆட்சி எல்லாக் கட்சிகளுக்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எதிர்க்கட்சி செவ்வனே இயங்காத நிலையில் அது மக்கள் ஆட்சி என்று கொள்வதற்கு எவ்வித நியாயமுமில்லை.

இன்று எங்கள் நாட்டில் தேர்தல் முறை மறைந்து, எதிர்க் கட்சிகளின் பலம் குறைந்து அரசின் கட்சியே ஒற்றை ஆட்சி என்ற முறையில் தொடர்வது ஜனநாயகமாகாது.

மாணவர்கள் மத்தியில் மட்டுமல்ல, பொது மக்கள் மத்தியிலும் அதிகரித்து வரும் அதிருப்தியும், அமைதியின்மையும் நல்ல பாராளுமன்ற ஆட்சியையே நாடி நிற்கின்றன.

கடைத் தேர்தலைக் கைவிட்டு, இடைத்தேர்தலைக் ஒழுங்காக நடத்தி, உரிய காலத்தில் முதற் தேர்தலை முறையாக நடத்தும் வழக்கத்தை மீண்டும் அறிமுகப்படுத்தச் சந்தர்ப்பம் வர வேண்டுமென்பதே எமது பிரார்த்தனை.

இதற்கு 'தேசிய அரசாங்கம்' சமனுகாது. இந்த நாட்டின் உயிர் நிலையம் இதன் ஆயிரக்கணக்கான கிராமங்களிலேயே காணப்படுகின்றது.

அக் கிராம வாசிகளின் அபிலாஷைகளை அறிந்து ஆட்சி புரிவதற்கு மக்களின் தேர்தல் முறை அவசியம்.

கொழும்பிலிருந்து இலங்கைப் படத்தைப் படித்து, அதற்குரிய முறையில் பிரதிநிதிகளை உற்பத்தி செய்யும் முறை பெரும் ஆபத்தானது. இனி நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல் அரசுக்கு அறிவூட்டும் பயிற்சியாக இருக்கட்டும்.

### தவக்கால நற்சிந்தனை



## நம்பிக்கை வையுங்கள்

''இதோ நேரம் வருகிறது. வந்தேவிட்டது. அப்போது நீங்கள் சிதறுண்டு ஓடுவீர்கள். உலகில் உங்களுக்கு வேதனை உண்டு. ஆயினும் துணிவுடன் இருங்கள். நான் உலகை வென்றுவிட்டேன்'' இன்று நாம் பலவிதமான துன்ப துயரங்களை அனுபவிக்கிருேம். ஆனால் துன்ப துயரங்களின் போது மனம் சோர்ந்து, உம்மை மறந்து விடுகிருேம். அல்லது உமக்கெதிராக முறையிடுகிருேம். இனிமேலாகிலும் நீர் உலகை வென்றுவிட்டீர் என்ற துணிவுடன் உம்மில் நம்பிக்கை வைத்து வாழ துணைபுரியும்.

அருட்செல்வன் ம. ரூபன்

### நவசீனுவில்

# மாசேதுங் கொள்கைகள் நிராகரிக்கப்படுகின்றன

## 16 ஆண்டுகள் அங்கிருந்துவிட்டு திரும்பியவர் பேட்டி

(நமது நிருபர்)

''காலஞ் சென்ற சீனத் தலைவர் மாசேதுங்கின் அரசியற் கொள்கைகள், பொருளாதாரக் கொள்கைகள், சமூகக்கொள்கைகள், கலை இலக்கியக்கொள்கைகள் அனைத்தும் சீனுவின் இன்றைய ஆட்சியாளர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவை அதிதீவிரமானவை அல்லது கலாவதியானவை என்று அவர்கள் கருதுகின்றனர்.

மாசேதுங் நடத்திய பாட்டாளி வர்க்கக்கலாச்சாரப் புரட்சியை இன்றைய சீனத் தலைவர்கள் சீனுவில் ஏற்பட்ட மிகப் பெரிய நாசம் என்று அழைத்துள்ளனர். மாசேதுங்கின் கொள்கைகளினுல் சீனப் பொருளாதாரம் அழிவு விளிம்பிற்குச் சென்றது என்று அவர்கள் பகிரங்கமாகக் கூறியுள்ளனர்.''

இவ்வாறு சீனத் தலைநகரான பீக்கிங்கில் 16 ஆண்டு காலம் வாழ்ந்து பீக்கிங்கின் வானெலி நிலையத்தின் தமிழ்ப்பகுதியில் பணியாற்றிய திரு வீ சின்னத்தம்பி ஈழநாட்டிற்கு அளித்த பேட்டி ஒன்றிற் கூறினுர்.

''சீனுவை அமெரிக்காவைப் போல் சோவியத் யூனியனைப் போல் பலம் வாய்ந்ததோர் நவீன வல்லரசாகக் கட்டியமைக்கும் நோக்கமுடையதே இன்றைய சீன ஆட்சியாளர்களின் நவீனமயமாக்கத் திட்டம், மேற்கத்தைய நாடுகளிலிருந்தும் யப்பானிலிருந்தும் நிதி, தொழில்நுட்ப மற்றும் உதவிகளைப் பெறுவதில் சீனு தற்போது பெரிதும் அக்கறை காட்டிவருகின்றது. கடின உழைப்பு, சுயசார்பு என்ற மாசேதுங் காலத்துச் சீனக் கொள்கையின் செல்வது போற் தெரிகின்றது'' என்று அவர் மேலும் கூறினுர்.

### பீகிங்கில் ஆற்றிய பணி

சீனுவிற் தனது பணிபற்றிக் கூறியபோது திரு. சின்னத்தம்பி, ''நான் 1966 ஆகஸ்ட் மாதம் முதல் 1982 யூலைமாதம் வரை சீனுவில் பீக்கிங்வானெலியின் தமிழ்ப் பகுதியில் பணியாற்றினேன். தமிழ் படித்த, தமிழ், எழுதப் பேசத்தெரிந்த பத்துக்கு மேலான சீனர்கள் என்னுடன் வேலை செய்தனர். வேலை செய்தனர். அவர்கள் மொழிபெயர்ப்பு. ஒலிபரப்பு முதலிய வேலைகளைச் செய்யக் கூடியவராக இருக்கின்றனர். எங்கள் தமிழ்ப்பகுதியில்பெண்களே கூடுதலாக இருக்கின்றனர். தமிழ் மொழியைப் படித்து அதிற் திறமையுடன் வேலைசெய்வதில் அவர்கள் அனைவரும் பேரக்கறை காட்டுகின்றனர்'' என்று குறிப்பிட்டார்.

''ஆனல் சீனுவின் நவீனமயமாக்கத் திட்டம் பீக்கிங் வானெலியின் தமிழ் ஒலிபரப்பையும் பாதிக்கும் போற்தெரிகின்றது. இதுகாலவரை 35க்கு மேலான வெளிநாட்டு மொழிகளில் ஒலிபரப்பி வந்த பீக்கிங் வானெலி இலசிறியமொழி ஒலிபரப்புக்களை நிறுத்தத் தீர்மானித்துள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், யப்பான் அரபு ஆகியனவே அவர்கள் பெரிய மொழிகள் எனக்கருதுபவை தமிழ் சிங்களம் ஆகியன சிறிய மொழிகள் என்பவற்றுக்குள் அடங்கும். தமிழ் ஒலிபரப்பின் எதிர்காலம் தற்போது கடுமையான விவாதத்தில் இருக்கின்றது என நான் புறப்படுவதற்கு முன் அறிந்தேன்'' என்று அவர்மேலும் கூறினுர்.

### பாம்பு தின்பார்களா?

சீனுவிற் பாம்பு தின்பார்களா என்ற வழமையான கேள்விக்கு பதிலளிக்கையில் ''ஆம் ருசித்துச் சாப்பிடுவார்கள். 68-ம் ஆண்டில் சாங்காய் சென்றிருந்தபோது பாம்புக் கறி சாப்பிடும் சந்தர்ப்பம் எனக்கும் கிட்டியிருந்தது. ஆனல் என்னுடன் கூடச்சென்றிருந்த யப்பானியப் பெண்கள் சிலர் பயங்கொண்ட காரணத்தால் நான் அதனைச் சாப்பிட முடியவில்லை உண்டவர்கள் பாம்புக்கறி, கோழிக்கறி போல் இருக்கும் என்று கூறினுர்கள் இப்பொழுது சீனுவின் தென் பகுதியிலுள்ள குவாங்கோ (கன்ரன்) நகரத்தில் பாம்புக் கறிக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன மேலை நாட்டுச்சுற்றுலாப் பயணிகள் இக் கடைகளின் சிறப்பான வாடிக்கைக்காரர்களாக இருக்கின்றனர். 78ம் ஆண்டில் சீனத்தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில்பாம்புக்கறித் தயாரிப்பை நான் பார்க்க முடிந்தது.

பாம்பு மட்டுமா? தலைதுடித்துக்கொண்டிருக்கும் நிலையில் பொரிக்கப்பட்ட மீன், புலி இறைச்சி முதலியனவும் இப்பொழுது சீனுவில் தயாரிக்கப்படும் உணவுகளாகும், எல்லாம் சுற்றுலாப் பயணிகளுக்காக, பிரமாதமாக அமெரிக்க டாலருக்காக''

சீனுவிற் சோறு சாப்பிடுவார்களா? எங்களைப் போல் மிளகாய்களும் சேர்ப்பார்களா?

''முன்னர் வட சீனர் கோதுமைமாவுப் பண்டங்களையே உண்டனர். தென் சீனர் நெற் பண்டங்களைச்சாப்பிட்டனர். ஆனல் இப்போது வட சீனரும் சோறுண்ண ஆரம்பித்துள்ளனர். தென் சீனருங் குறைவாகவென்ருலும் கோதுமைமாவுப் பண்டங்களை உண்ண ஆரம்பித்துள்ளனர்,

காரத்தைப் பொறுத்தவரையில் இலங்கையரை அதிலும் யாழ்ப்பாணத்தமிழரையாரும் மிஞ்சமுடியாதுஎன்பதேஎனது அனுபவம். வடசீனர் இப்பொழுது தான் கொஞ்சம் கொஞ்சம் மிளகாய்சாப்பிடத் தொடங்கியுள்ளனர். தென் சீனரும் பச்சைமிளகாயையே சாப்பிடுகின்றனர். எங்களைப் போல் மிளகாயை வறுத்து சரக்குடன் சேர்த்து நறுமணம் எழும்ப இடித்து கறியிற் சேர்த்து வாய்க்காலும் மூக்காலும்வடியச் சாப்பிடுவோர் உலகில் வேறெவரும் இருப்பாரா என்பது சந்தேகந்தான்''

''சீனுவில் வாழ்ந்த பதினறு ஆண்டுகளில் பத்தாண்டுகள் கலாச்சார புரட்சியின் மத்தியில் கழிந்தன. மிகுதி ஆண்டுகள் நவீனமயமாக்கபோக்கின் மத்தியிற் சென்றன. சோஷலிச மாவோவின் சீனுவையும் மாவோவுக்குப்பிந்திய சீனுவையும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக்கிட்டியது. இதைப் பெரியதோர் அனுபவமாகவே நான் கருதுகிறேன்'' என்று சின்னத்தம்பி கூறினுர்.

பதினறு ஆண்டுகால உங்கள் சீன வாழ்க்கையிலான மறக்கமுடியாத சம்பவங்கள் யாவை? இக்கேள்விக்குத் திரு. சின்னத்தம்பியின் பதில் வருமாறு:

''சீனுவின் தங்சான் நகரத்தில் ஏற்பட்ட அதிபயங்கரப் பூமி நடுக்கம், மார்சல், சூ என்லாய் சூத்தே, தங் பிவு, கால் சென் முதலிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீனத்தலைவர்களின் மறைவு, நாலு பேர்குழுவின் வீழ்ச்சி ஆகியன மறக்கமுடியாத சம்பவங்களாகும். தாங்கானில் பூமிநடுக்கம் ஏற்பட்ட பின் நாமும் 18நாட்கள் கூடாரத்தில் வாழ்ந்தோம்.

சீனமக்கள் பற்றி நீங்கள் சிறப்பாகக் கூற ஏதேனும் உண்டா?

சீனமக்கள் அயரா உழைப்பும் விடாமுயற்சியும் உடையவர்கள். தன்னடக்கமானவர்கள். குடும்பப்பற்றுநிறைந்தவர்கள் நல்ல நண்பர்கள். மகத்தானதோர் ரத்தஞ்சிந்திய புரட்சியை நடத்தி நவசீனத்தை உருவாக்கிய சீன மக்கள் உண்மையில் சாதாரணமாகபொறுமையின் சிகரங்கள். ஆனல் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? எந்த விஷயமும் அந்த எல்லையை மீறும்போது அவர்கள் எரிமலை வெடிப்பதுபோல் வெடித்தெழுவார்கள்'',

# மக்கள் கருத்து

## இரவில் கைவரிசை!

யாழ். நகர் பொது நூல் நிலையம் காலை முதல் மாலை 8-மணி வரை மக்களால்பயன் படுத்தப்படுகின்றது,

மணிக்கூட்டுச் சந்தியில் இருந்து, திறந்தவெளி அரங்கின் பக்கத்தில் முனீஸ்வரன் ஆலயத்திற்கு வரும் ரோட்டில் இரவில் வெளிச்சம் இருப்பதில்லை இந்த ரோட்டின் ஓரத்தில் சாரமும், சேட்டும் அணிந்த வழிப்பறியர் தனியாக பொதுநூலகத்திலிருந்து வருபவரை, இருவர் சேர்ந்து கதை கொடுத்து. நேரம் கேட்டு தனிநபரை மறித்து அவரின் சட்டைப்பையில் கைவைத்து இருப்பதைப்பிடுங்குவது வழக்கமாகி வருகிறது.

மாலை நேரங்களில் யாழ். நகரில் இப்படியான சம்பவங்கள் நடவாதிருக்க அதிகாரிகள் ஆவன செய்தால் சமூகத்திற்கு உதவியாகவிருக்கும்.

இங்ஙனம்
அன்புள்ள
என். கந்தையா
மின்சார நிலையவீதி.

# தாயாரின் சுகவீனத்தில் மர்மம்; அதனால் தந்தையுடன் பேசுவதில்லை!

## போதகரின் மகள் சாட்சியம்

(கொழும்பு)

'எனது தாயாரின் சுகவீனம் தொடர்பாக சில மர்மம் இருப்பதாக நான் அறிந்திருந்ததால் 79-ம் ஆண்டு இலங்கைக்கு வந்தநாள் முதல் நான் என் தந்தையுடன் பேசவிருப்பமில்லை.

வண. மத்தியுஸ் பீரிஸ்சம்பந்தப்பட்ட இரட்டை கொலை வழக்கில் அரசதரப்பில் சாட்சியமளித்த வண. பிதா பீரிஸின் மகளான மல்ராணி தொடங்கொட மேற்கண்டவாறு கூறினர்.

டெக்ரின் இங்ரம் குடும்பத்தினரைக் கவனிக்குமாறு தேவதைகள் தமக்குக் கட்டளையிட்டுள்ளதாக என் தந்தையார் தமது இறந்த தாயாரிடம் ஒரு தடவை கூறியதாக மல்ராணி தொடங்கொட கூறினர்.

'தேவாலயக் குருமனைக்கு டாக்ரின் இங்ரம் குடும்பத்தினர் வந்து தங்குவது நல்லதல்ல என்று எனது தாயார், எனது தந்தையாரிடம் கூறினர்' என்றும் மல்ராணி தமது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

திருமதி டாக்ரினை இங்ரமுடன் சேர்ந்து வண மத்யூ பீரிஸ் தனது மனைவியையும், டாலினின் கணவர் இங்ரம் ஆகிய இருவரையும் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 7-ம் திகதிக்கும் 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் திகதிக்கு மிடையில் இந்த இரட்டைக் கொலைகளை நடாத்தினர்கள் அல்லது கொலைகளை நடாத்த திட்டமிட்டார்கள் என்பதே இவர்கள் இருவர்மீதுமுள்ள குற்றச் சாட்டுகளாகும்.

திருமதி டாக்ரின் இங்ரமுக்கும், மத்யூ பீரிஸுக்கும் மிடையில் இருந்துவந்த காதல் தொடர்பே, இவ்விரு கொலைகளுக்கும் காரணமென அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வந்தார்கள். ஏப்ரலில் எனது தந்தையார் இலங்கை திரும்பினர். அப்போது எனது தாயார் லண்டனில் எங்களுடன் இருந்தார். அப்போது எனது தாயார் என்னுடைய தந்தையார் இலங்கையில்தான் இல்லாது சாப்பாடு விஷயங்களில் கஷ்டப்படப் போவதாகச் சொல்லிக் கவலைப்பட்டார்.

'அந்த நேரத்தில் எனது தாயார் ஒரு தந்தியை இலங்கையிலிருந்து பெற்றார். அதில் தந்தையார் பெரியதொரு 'விஷயத்தில்' அகப்பட்டுள்ள தகவல் தெரியப்படுத்தப் பட்டிருந்தது, அன்று இரவு தந்தையாருடன், தாயார் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அதுவரை வீட்டிலேயே டாக்ரின் தங்கினர். அந்த நேரத்தில்தான் எனது தாயாரிடம் டால்ரின் குடும்பத்தைக் கவனிக்குமாறு தேவதைகள் கூறியதாக என் தந்தை, தாயாரிடம் சொன்னர்.

''டாக்ரின்மீது வைத்துள்ள நெருக்கம் போன்று எனது தாயார்மீது என் தந்தையார் வைத்திருக்கவில்லை. எனது தாயாரிடம் சினப்பதைக் கூடக் கண்டிருக்கிறேன். சில நாட்களுக்குப் பின், எனது தாயார் சுகவீனமாக இருப்பதைக் கவனித்தேன். முழு நேரமும் எனது தாயார் மிகவும் சோர்ந்துபோய் இருப்பதைக் கண்டேன். இங்கிலாந்திலிருந்து வரும் போது மிகவும் நல்ல நிலையிலிருந்தார். அதன் பின்னர் தந்தையார் எனது தாயாருக்குச் சில குளிசைகளைக் கொடுத்தார்.

தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

### குருமனை இரட்டைக் கொலைவழக்கு

இந்த காதல் தொடர்பின் எதிரொலியாக திருமதி டாக்ரின் கணவரையும், வண. மத்யூஸ் பீரிஸ் தனது மனைவியையும், தன் காதலி டாக்ரினுடன் சேர்ந்து கொலை செய்ததாக அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது,

'நாங்கள் நிரபராதிகள்' என்று இவ்விருபகும் நீதிமன்றத்தில் தெரிவித்தாழ.

திரு. திஸ்ஸ பண்டாரநாயக்கா, திரு, சி இராமநாதன், டபிள்யூ விக்ரமசேகரா ஆகியோர் கொண்ட நீதியரசர் குழு இவ்விசாரணையை நடாத்தியது.

வண. மத்யூ பீரிஸுக்கு 64 வயது இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்.

விதவையான திருமதி டாக்ரின் இங்ரமுக்கு இரண்டு பிள்ளைகள்.

பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திரு. திக் மாரப்பன குறுக்கு விசாரணை செய்த போது மல்ராணி பீரிஸ் கூறியதாவது:

நான் இங்கிலாந்தில் பிறந்தேன். முதல் தடவையாக 1957-ல் இலங்கைக்கு வந்தேன், 1976 வரை இங்கு இருந்தேன். கொழும்பு மகளிர் கல்லூரியில் படித்தேன். எனது மூத்த சகோதரி மிஹிறி திருமணம் செய்து லண்டன் சென்றார். நானும் 1976-ல் அங்கு மீண்டும் சென்றேன். 1978-ல் எனது தாயாரும், தந்தையாரும் லண்டன் பேசினார்.

'எனது தாயாருடன் 1978 டிசம்பர் 6-ம் திகதி இலங்கை திரும்பினேன் எனது தந்தையாரின் குருமனைக்குச் சென்றோம். அன்றிரவு எனது தந்தையார் உருவமில்லாதவருடன் பேசினார். எனது தாயாருக்கு ஏதோ ஒரு வயிற்று நோய் இருப்பதாகத் தேவதை கூறியதாகச் சொன்னார்.

டாக்டர் வீரசேனவிடம் எனது தாயார் அழைத்துச் செல்லப்பட்டார். ஏதாவது வலி இருக்கிறதா என்று என் தந்தையார் தாயாரிடம் கேட்டார். தாயார் சாதகமாகப் பதில் சொல்லவில்லை. எனது தாயார் அப்போது மிகவும் நல்ல சுகமான நிலையிலேயே இருந்தார்.

எனது தாயார் மிகவும் சமயப்பற்றுள்ளவர். தந்தையார் சொல்லும் எதையுமே தேவவாக்காக எனது தாயார் ஏற்றுக்கொள்பவர். தன்னைக் கணவனுக்கு முற்றாக அர்ப்பணித்த ஒரு மனைவி என் தாயார்.

''கிறிஸ்மஸ் இரவு விருந்து பசாரத்தில் கலந்துகொண்ட டாக்ரினும் பிள்ளைகளும் இரவு எங்கள் குருமனையில் தங்கினார்கள். என் தந்தையாரது அறைக்கு முன்னாலுள்ள அறை

---

### எஸ். ஜே. வி. நினைவுச் சொற்பொழிவு வெளியீடுகள்

1981ம் ஆண்டு பேராசிரியர் ஏ ஜெயரத்தினம் வில்சன் அவர்களால் நிகழ்த்தப்பட்ட சா. ஜே. வே. செல்வநாயகம் நினைவுப் பேருரையின் தமிழ் ஆக்கமும்.

1982ல் பேராசிரியர் சின்னப்பா அரசரட்ணம் அவர்களால் நிகழ்த்தப்பட்ட 'வட இலங்கைத் தமிழர் பொருளாதாரத்தின் வரலாற்று அடிப்படை' (Historical foundation of the Economy of the Tamils of North Sri Lanka என்ற தலைப்பிலான ஆங்கில சொற்பொழிவின் வெளியீடும் வரப்பெற்றோம்.

தந்தை செல்வா அறங்காவல் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள இவ்விரண்டு நூல்களும் யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பூபாலசிங்கம், கே. கே. எஸ் வீதியிலுள்ள காந்தளகம் ஆகிய புத்தக நிலையங்களில்கிடைக்கும்.

---

### கோண்டாவில் பாலர் பாடசாலை அடிக்கல் நாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட மங்கையர் கழகத்தின் ஆதரவின் கீழ் கோண்டாவில் ஞானவீரசிங்க மாதர் அபிவிருத்திக் கழகத்தினதும் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய குடும்பநல, சுகநலத்திட்டத்தினதும் ஞானவீரசிங்கபாலர் பாடசாலை அடிக்கல் நாட்டு விழா இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ் மாவட்ட மங்கையர் கழகத்தலைவி திருமதி யோகேந்திரா துரைச்சுவாமி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டுவார்.

[மா]

---

### தேசிய இளைஞர்மன்ற முஸ்லிம் இளைஞர் கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் வட்டார கிராமோதய சபையின் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவை மன்ற முஸ்லிம் இளைஞர் கழகம் அமைக்கும் (நிஸ்லோ பிரிவு சம்பந்தமான கூட்டம் அண்மையில் ஒஸ்மானியாக் கல்லூரியில் கூட்டப்பட்டபோது கிராமோதய சபை உறுப்பினர்களும், கிராம சேவை அலுவலர் ஆகியோரும், இன்னும் தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு. எஸ். முருகையாவும் கலந்துகொண்டனர்.

இம்மாத இறுதிக்குள் இக்கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருப்பதால் இதில் சேர விரும்புகின்றவர்கள் முஸ்லிம் வட்டாரகிராமசேவை அலுவலர் அல்லது கிராமசேவை அலுவலர் அல்லது முஸ்லிம் லீக் வாலிப முன்னணி செயலாளர்களோடோ தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

---

### மன்னாரில் மகளிர் குழு கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுத் தலைவிகளுக்கு தாழ்வுபாட்டில் நடாத்த இருநாள் கருத்தரங்கிலும் பயிற்சி வகுப்பிலும் மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எம். சுந்தையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மன்னார் தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் திரு. எஸ். மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இலங்கை தேசிய கூட்டுறவு சபை உப தலைவர் திரு. தி, இராசநாயகம், நுவரேலியா கல்வித் திட்டப் பணிப்பாளர் செல்வி ஜெயகாந்தா தென்னக்கோன், மன்னார் தே. ச. மாவட்டச் செயலாளர் திரு. பொ. சண்முகசுந்தரம், கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர் திரு. நாகேஸ்வரன். பாலையாளர் கல்வித் திட்ட இணைப்பாளர் திருமதி வ. தனபாலசிங்கம், வண பிதா அருட் திரு பொன்னையா, மன்னார் மாவட்ட மகளிர் குழுத் தலைவி செல்வி இ. பாக்கியம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்கள்.

(உ)

---

### இன்று மகோற்சவம் ஆரம்பம்

(மாவிட்டபுரம்)

கட்டுவன் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஆலய உற்சவம் தொடர்ந்து நடைபெற்று இம்மாதம் 27ம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. தினமும் காலை, மாலை ஆகிய இரு நேரமும் விசேட அபிடேக ஆராதனைகளும், சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன ஆலய பிரதமகுரு சிவத்திரு சி. ஆறுமுகக் குருக்கள் உற்சவத்தை நடத்தி வைப்பார்.

(க)

---

போஷாக்கின்மை, நோய்களினால்

## 'தோட்டக் குழந்தைகளின் இறப்பு அதிகரித்துள்ளது'

### வி. எஸ். ராஜா கவலை

[கொழும்பு]

'உலக சனத்தொகையில் 500 கோடி மக்கள் வறுமையினால் சீரழிகின்றனர். இந்த 500 கோடி மக்களில் பெரும் தொகையானோர் கிராமப் புறத்தைச் சேர்ந்தவர்களாவர். போஷாக்கின்மையினாலும், நோய்களினாலும் இறக்கும் தோட்டக் குழந்தைகளின் தொகையும் அதிகரித்துள்ளது.'

இவ்வாறு இலங்கை விவசாய கிராமிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. வி. எஸ். ராஜா, காங்கிரஸின் முதலாவது வருடாந்தக் கூட்டத்திலே உரையாற்றுகையில் கூறினார்

இவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியவாவது:-

'விவசாய மக்களுக்கு விமோசனமளிக்கும் பொருட்டே இலங்கை விவசாய கிராமிய தொழிலாளர் காங்கிரஸ் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

'சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஒருவரையொருவர் நன்குபுரிந்துகொண்டால்தான் இருபெரும் இனங்களின் உரிமைகளை வென்றெடுக்கமுடியும். உழைப்பவர்களின் உரிமைக்காகப் போராடி அவைகளை வென்றெடுப்பதே எமது கொள்கையாகும்.

இக்கூட்டத்தில் பல கோரிக்கைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன் அவைகளை ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவிற்கு அனுப்பிவைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

### ரூபவாஹினியில் இன்று

மாலை
- 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
- 6-01 கார்ட்டூன் திரைப்படம்
- 6-15 விளையாட்டு சம்பந்தமான நிகழ்ச்சி
- 6-30 பலரக அம்சங்கள் சம்பந்தமான தகவல்களை சித்தரிக்கும் நிகழ்ச்சி (சிங்களம்)
- 7-00 செய்தி மஞ்சரி (தமிழ்)
- 7-14 நாளைய நிகழ்ச்சிகள்
- 7-15 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
- 7-45 நமது பாற்பண்ணையை எப்படி முன்னேற்றலாம்? விபரணச் சித்திரம்
- 8-15 செய்தி மஞ்சரி (சிங்களம்)
- 8-29 நாளைய நிகழ்ச்சிகள்
- 8-30 சிங்கள நிகழ்ச்சி
- 9-00 புதுடில்லியில் நடைபெற்ற 'ஆசியாட்' விளையாட்டுகள் சம்பந்தமான நிகழ்ச்சித் தொகுப்பு
- 9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)
- 9-45 'ஆசியாட்' நிகழ்ச்சிகள் (தொடர்ச்சி)
- 10-15 ஒலிபரப்பு முடிவு

---

### மன்னார் கூட்டணி கிளைக் கூட்டம்

[மன்னார்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மன்னார் மாவட்ட மத்திய குழுப் பொதுக்கூட்டம் நாளை மன்னார் பட்டின சபை மண்டபத்தில் நடைபெறும்.

மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை. மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. வி. கைலாசபிள்ளை ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொள்வார்கள்,

[க]

---

### பரீட்சை திகதி மாற்றம்

[கரவெட்டி]

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் இம்மாதம் 30, 31ம் திகதிகளில் நடாத்தப்பட விருந்த விஞ்ஞான, கணித பாடப் பரீட்சை வேறு திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சை, பெரிய வியாழன் தினமான இம்மாதம் 31ம் திகதி நடைபெறுவதால் கத்தோலிக்க மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி. வின்சென்ற் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளரிடம் தெரிவித்த ஆட்சேபனையைத் தொடர்ந்தே இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பிரஸ்தாப பரீட்சை இம்மாதம் 24ம், 25ம் திகதிகளில் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "கல்வித்துறையிலேயே தமிழினம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது"

## பரிசளிப்பு விழாவில் 'அமிர்'

(பண்டத்தரிப்பு)

"அடக்குமுறையும் சித்திரவதையும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் தமிழினம் தனது கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் இழக்குமானால் அது தற்கொலைப் பாதைக்கே இனத்தை இட்டுச் செல்லும். சோதனை மிக்க இக்காலகட்டத்தில் எம்மிடையே வேற்றுமைகளை வளர்ப்பது மற்றவர்களுக்கு விரோதமாக இயங்குவது ஆகியன தவிர்க்கப்படல் வேண்டும்"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை தொகுதி எம். பி யுமான திரு. அ. அமிர்தலிங்கம். இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மகாவித்தியாலயத்தின் புதிய கட்டிடதிறப்பு விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மகாவித்தியாலய அதிபர் சங்கைக்குரிய சகோதரி விக்ரறின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சுமார் நான்கு இலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட புதிய இருமாடிக்கட்டிடத்தை திரு. அமிர்தலிங்கம் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

திரு. அமிர்தலிங்கம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இன்று தமிழினத்தின் அரசியல் பொறுப்பைச் சுமந்து நிற்கும் நாம் சுயநலம் கருதியோ சொந்த லாபம் கருதியோ செயற்படவில்லை. எமது இனத்தின் சுபீட்சம், முன்னேற்றம் ஆகியவற்றை கருத்திற் கொண்டே செயல்பட்டு வருகின்றோம். வசைபாடுவதாலும், திட்டுவதாலும் பயமுறுத்துவதாலும் எமது பாதையை எவரும் மாற்றிவிட முடியாது. சத்திய வழி நின்ற புனித பாதையில் சென்றுகொண்டிருக்கும் எம்மை பயமுறுத்துவதன் மூலம் திசைமாற்றிவிடமுடியாது"

"பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் பல்வேறு மாறுபட்ட கருத்துக்களை தன்னகத்தே கொண்ட குழுக்கள் அங்கம் வகித்தபோதிலும் பொது எதிரியை வீழ்த்தவேண்டும் என்ற இலட்சியமே அந்த இயக்கத்தில் மேலோங்கி நிற்கின்றது. அந்த இலட்சியம் நிறைவேறவே அவைகள் இயக்கத்தில் ஒன்றிணைந்து போராடி வருகின்றன. தமிழினம் அவிழ்ந்து விட்ட நெல்லிக்கனிபோல சிதறி கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் இழக்கக் கூடாது"

"இன்று பல்வேறுதுறைகளிலும் பாதிக்கப்பட்டு வரும் எமது தமிழினம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பது கல்வித்துறையிலேயாகும். தென்னிலங்கையிலுள்ள பிரபல கல்லூரிகளுக்கு கல்வி அமைச்சு 10 லட்சம், 20 லட்சம் என்று பல லட்சம் ரூபாய்களை நேரடியாக ஒதுக்கீடு செய்கின்றது சமீபத்தில் கொழும்பு ஆனந்தா கல்லூரிக்கும் இவ்வாறு அதிக தொகை ஒதுக்கப்பட்டது"

யாழ். பேராயர் அதிவந்த கலாநிதி. பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"பாடசாலைகளில் வருடா வருடம் பிள்ளைகளின் தொகை அதிகரிக்க அதிகரிக்க அதற்கேற்ற தளபாடவசதிகள், கட்டிடவசதிகள் என்பவற்றையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இப்பாடசாலை கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கி பெண்கள் கல்வியில் முக்கிய பங்குவகித்து வருவது பாராட்டுதற்குரியதாகும். மேலும் இப்பாடசாலை முன்னேறி கல்விச் சேவையாற்றவும், இறைபணிசெய்யவும் இறைவன் ஆசிகிடைக்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.


பாடசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவர் சட்டத்தரணி எஸ். சேவியர் வரவேற்புரை நிகழ்த்தினர். பரிசில்களை திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் வழங்கினர். (க)

## அபிவிருத்தி லொத்தர் யாழ். வாசிக்கு ஒரு லட்சம்!

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி அம்பிகா மகேஸ்வரனுக்கு அபிவிருத்தி லொத்தர் சுவீப் மூலம் ஒருலட்சத்து 60 ரூபா கிடைத்துள்ளது. அதேயிடத்தைச்சேர்ந்த செல்வி நந்தினிதேவிக்கும் இச்சீட்டுக்களின் பேரில் 1140 ரூபா கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அபிவிருத்தி சுவீப் விற்பனை செய்யும் திரு. வி. முத்து என்பவர் மேற்குறிப்பிட்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.


# மீண்டும் கிடைக்கின்றது




## ஜப்பானிய பம்ப் தொழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

"டெர்க்காய்" தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் "பிறிக்ஸ் & ஸ்ரற்றன்" என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

- ★ நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
- ✶ மண்ணெண்ணெ கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
- ✶ மொத்த நிறை 28 கிலோ (61 றாத்தல்)
- ✶ ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு

ஹேலீஸ் லிமிட்டெட்

25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10, தொலைபேசி 91181

Mel Ads

எமது யாழ். மாவட்ட ஏக விற்பனையாளர்:

கல்யாணி ஸ்ரோர்ஸ் 31, நியூ மார்க்கட், சுன்னாகம்.


# "பஞ்சமர் காட்டிய வழி நடைமுறை சாத்தியமானது"

## ஆய்வரங்கில் கருத்து

[கொழும்பு]

"பத்து ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த இந்தப் 'பஞ்சமர்' நாவல் அதன் இரண்டாம் பாகம் வெளிவந்த பின்னும் கூட இன்னும் பிரச்சினைக்குரியதாகவே விமர்சிக்கப்படுகிறது. இதுவரை தமிழில் வெளிவந்த எந்த நாவலும் இந்த இடத்தைப்பெற்றதில்லை. தமிழ் சமூகத்தை ஊடுருவி நிற்கும் புற்றுநோயான இந்தச்சாதி நோயை அடியோடு அழித்து விடுவதற்காக எழுந்த இலக்கிய வழிகளில் 'பஞ்சமர்' காட்டிய வழிதான் சிறப்பானதும் நடைமுறைச் சாத்தியமானதும் என்பதனை பஞ்சமர் நாவல் வெளிவந்ததன்மேல் நடந்த நடைமுறைச் சம்பவங்கள் நிரூபித்து நிற்கின்றன.",

இவ்வாறு கொழும்பு விவேகானந்தாமண்டபத்தில் நடந்த பஞ்சமர் ஆய்வரங்கில் தலைமை வகித்துப்பேசியபோது திரு.வ. இராசையா குறிப்பிட்டார்.

தகவம் இலக்கிய அமைப்பினால் இக்கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. ஆய்வரங்கில் உரையாற்றிய யாழ்.சர்வகலாசாலை விரிவுரையாளர் திரு. இ. சிவலிங்கராசா பேசும்போது 'பஞ்சமர்' நாவலில் கையாளப்பட்டுள்ள மொழி அமைப்பே இந்த நாவலில் சிறப்புக்கு அடித்தளமென்று கருதுகிறேன். தமிழ் வழக்கிலிருந்து அருகிப்போன பலசொற்களைப் பதிவுசெய்து இதன் ஆசிரியர் கே. டானியல் செய்தசேவைக்குப் பல நூறுவருடங்களுக்குத் தமிழர்கள் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். இந்த நாவல் யாழ்ப்பாணக் கிராமிய வாழ்வுமுறைக்கும் கிராமியத் தமிழ் சொற்களுக்கும் ஒரு ஆவணமாகும்" என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் தெளிவத்தை யோசப், தயாபரன், முருகபூபதி, காவலூர் இராஜதுரை, பெனடிக்ற் பாலன், யேசுராசா ஆகியோர் பேசினர். மாத்தளை கார்த்திகேசு வரவேற்புரை வழங்கினர். நாவலாசிரியர் கே. டானியல் நன்றிதெரிவித்துப் பேசினார். ஆண்கள், பெண்கள் உட்படப் பெருந்தொகையானோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# சிமெந்துத் தொழிற்சாலையில் இவர்களுக்கு மீண்டும் வேலைகிடைத்துள்ளது!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டு வருகிறது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் 3-ம் கட்டப்பிரிவில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர். ஆனால் இந்த ஒப்பந்தத்தை சிமெந்துத்தொழிற்சாலை 3-ம் கட்டப்பிரிவினர் அண்மையில் ரத்துச் செய்திருந்தால் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தொழிலாளர்கள் வேலையிழந்திருந்தனர்.

இதுபற்றி மேற்படி சங்கம் யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்திருந்ததாகவும் அவர் இதுபற்றி சிமெந்துத் தொழிற்சாலை 3-ம் கட்டப் பிரிவினருடன் தொடர்பு கொண்டதாகவும் அதன் பயனாகத் தற்போது மேற்படி கிராம அபிவிருத்தி சங்கமும் தொழிலாளர்களை வேலைக்காக வழங்க வழியேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் முதல் இச்சங்கம் மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்கி வருகிறது.

## எம். பி யிடம் கோரிக்கை

[அரியாலை]

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு உதவி அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் ஒருவரை கல்லூரியிலிருந்து மாறாற்றும்படி சாவகச்சேரி நல்லூர் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரத்திற்கு கல்லூரியின் பழையமாணவர் சங்கமும், கல்லூரியின் அபிவிருத்திச்சங்கமும் இப்பகுதியைச் சேர்ந்தசனசமூக நிலையங்களும் அவசர தந்திகளை அனுப்பி வைத்துள்ளன.

[க]

## மாவிட்டபுரத்தில் விறகு தட்டுப்பாடு

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள அரசினர் விறகுக்காலையில் போதியவிறகு இல்லாமையால் பாவனையாளர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாகக் கூறப்படுகிறது.

மேற்படி விறகுக்காலைக்கு மிகக் குறைந்த அளவு விறகே இடைக்கிடையே வருவதாகவும், அதனை தேனீர்க் கடைக்காரர்கள், பேக்கரிக்காரர்கள் போன்றவர்கள் முதலிலேயே வாங்கி விடுவதாகவும், பின்னர் பாவனையாளர்கள் சென்றால் விறகு இல்லையென கை விரிக்கப்படுவதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

காங்கேசன்துறை, கீரிமலை, தெல்லிப்பழை, மயிலிட்டி, ஆகிய பெரும் பகுதிக்கு மத்தியாக விளங்கும் இந்த விறகு கிடைக்காமையால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

## விபத்தில் படுகாயம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை துறைமுக பகுதியில் கடமை புரிந்த சுழியோடி ஒருவர் எதிர்பாராது ஏற்பட்ட விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார்.

பூநகரி சிவபுரத்தைச்சேர்ந்த என்.கணபதிப்பிள்ளை என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

இவர் வள்ளமொன்றில் ஏறி கடலில் நின்ற கப்பலுக்கு செல்ல முயன்ற சமயம் வள்ளத்தின் சுக்கானில் ஏற்பட்ட தவறு காரணமாக அங்கிருந்த கயிற்றில் கால் அகப்பட்டுகாயமடைந்தார்.

யாழ்.அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[க]

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
BLIND RAGE
(Action- Thrill)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 4-15, 7-00
சனி. ஞாயிறு 1-30
சிவாஜி - உஷாநந்தினி
என்னைப்போல் ஒருவன்

மனோகரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
ஜெமினி - சுப்பையா
கப்பலோட்டிய தமிழன்

றீகல் தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர்
ஜெய்சங்கர் - லட்சுமி நடித்த
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)
அடுத்த வெளியீடு!
சட்டம் ஒரு இருட்டறை
[கலர்]

## இன்றைய பலன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்பாராத அரச பயத்திற்கு இலக்காகுவீர்கள்.

விருச்சிகம்: குடும்பம்இன்று கலைக்கோயிலாக மாறும், இசைத்துறையில் இன்று ஞானம் ஏற்படும், பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்ற முண்டு.

தனுசு: சூட்ச்சிவலை பின்னும், அடுத்துக் கெடுப்பவர்கள் அருகில் இருப்பார்கள், சகோதரர்களினால் மனக்கவலை உண்டு, போக்குவரத்தில் தடை ஏற்படலாம்.

மகரம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழிடத்திற்கு அழைத்துச் செல்லும், பிதா வழிச் சுகமுண்டு, தெய்வவழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும்.

கும்பம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள், ஓவியர்கள் வாழ்க்கை ஒளி வீசும்.

மீனம்: விவசாயிகள் வாழ்க்கையில் தனதானியம் விருத்தி அடையும், தெளிந்த மனம், தெய்வ சிந்தை, தேடியது கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் — சௌகார்ஜானகி
துணைவன்

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி(சுலிமன்கலர்)
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
கீழ்வானம் சிவக்கும்
(கலர்)

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
எம். ஜீ. ஆர். - ஜெயலலிதா
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் 19—20
போன்: 23642
எம்.ஜீ.ஆர்.-லதா-நம்பியார்
நீதிக்குத் தலைவணங்கு
(புதிய பிரதி)

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல் கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்!
வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன் மற்றும் பலர் நடித்த
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
"சரிதா" இப்படத்தில் நடித்ததன்மூலம் சிறந்த நடிகைக்கான ஜனாதிபதி விருதுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

"யாழ். மாவட்டத்தில்:

# நோர்வே அரசின் உதவியுடன் தும்பு, உரத்தொழிற்சாலைகள்"

## திட்டமிடல் அதிகாரி தகவல்

[சித்தன்கேணி]

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பத்துக் கிராம சேவையாளர் பிரிவிலும் இயற்கை பசளை வளங்களை மதிப்பீடு செய்யும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டம் முழுவதும் இந்த வேலை ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ்வேலையை விசேட சேவை உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளவுள்ளனர். இயற்கைப் பசளை வளங்களின் மதிப்பீட்டில் கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள கிராமரீதியாக பனை, வடலி, தென்னை, வேம்பு, பூவரசு, சீமைக்கிழுவை ஆகியவற்றின் விபரங்கள் மதிப்பிடப்படவுள்ளன.

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விசேட சேவை உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பான பயிற்சிக்கருத்தரங்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட திட்டமிடல் உத்தியோகத்தர் திரு. கே. சிவலிங்கம், புள்ளிவிபர உத்தியோகத்தர் திரு எஸ். மகேந்திரலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

இந்த மதிப்பீட்டை எடுப்பதன் முக்கிய நோக்கம் யாழ். மாவட்டத்தில் நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் உரத்தொழிற்சாலையொன்றையும், தும்புத்தொழிற்சாலையொன்றையும் ஆரம்பிக்கவே என்று கருத்தரங்கில் கலந்துகொண்ட திட்டமிடல் உத்தியோகத்தர் திரு. கே. சிவலிங்கம் தெரிவித்தார்.

கண்டாவளை சுற்றுலா

## உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் நிரந்தரமாகும்

(கிளிநொச்சி)

கண்டாவளை சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் செயலகம் நிரந்தர உதவி அரசாங்க அதிபர் அலுவலகமாக மாற்றப்படவுள்ளது.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியின் கோரிக்கையின் பேரில் அண்மையில் சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆரம்பிக்கப்பட்டது. கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரே இதற்குப் பொறுப்பாக இருந்தார். கிளிநொச்சி எம்.பி.யின் கோரிக்கையை அடுத்து நிரந்தர உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இது செயற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் செயலகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான புள்ளி விபரங்களைத் திரட்டுமாறு அரசினர் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் கே சுப்பிரமணியத்தைக் கேட்டுள்ளனர். புள்ளி விபரம் திரட்டும் முயற்சிகளில் உதவி அரசாங்க அதிபர் ஈடுபட்டுள்ளார்.

கண்டாவளை, வெலிக்கண்டல், முரசுமோட்டை, தர்மபுரம், ஊரியான் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக பிரஸ்தாப பணிமனை இயங்கும். இதற்கு முன்னர் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இப்பிரிவுகள் இணைந்திருந்தன. (ஈ)

வலி-வடக்கு

## பிரதேசசபைத் தலைவர் தெரிவு

[மாவிட்டபுரம்]

வலிவடக்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவிற்கான பிரதேசசபைத் தலைவர் தெரிவு இம்மாதம் 23ம் திகதி நடைபெற இருக்கிறது.

வலிவடக்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் ஏற்கெனவே இருந்த பிரதேசசபைத் தலைவரின் பதவிக்காலம் முடிவடைந்தமையால் புதிதாக தலைவர் தெரிவு இடம்பெறஉள்ளது.

வயோதிபர்

## இல்லத்தில் சிரமதானப்பணி

[யாழ்ப்பாணம்]

யாழ். கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கத்தினர் சர்வதேச மகளிர் விழாவையொட்டி கொழும்புத்துறை வயோதிபர் இல்லத்திற்கு சென்று சிரமதானப் பணி மேற்கொண்டனர்.

யாழ், உதவி அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரின் பணிப்பின்பேரில் சங்க உபதலைவி திருமதி இ. கமலாம்பிகை தலைமையில் ஆசிரியை ச. ருக்மணிதேவி உட்பட 13 மகளிர்கள் இந்த சிரமதானப் பணியை மேற்கொண்டனர். (ஈ)

கொழும்பில் இன்று ஆரம்பமாகும்

## பாரதி நூற்றுண்டுவிழா

### தமிழக அறிஞர்கள் கலந்துகொள்கின்றனர்

(கொழும்பு)

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க பாரதி நூற்றுண்டு விழா தேசிய குழுவின் இறுதிக் கட்ட விழா இன்றும் நாளையும் கொழும்பில் மிகக் கோலாகலமாக நடைபெறவிருக்கிறது.

கொழும்பு விழாவிலும் அதைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளிலும் சிறப்புச் சொற்பொழிவாளர்களாக தமிழகத்தில் இருந்து எண்ணற்ற ஆய்வு நூல்களைப் படைத்தவரும், மதுரைப் பல்கலைக் கழகப் பேராசிரியருமான டாக்டர் எஸ் ராமகிருஷ்ணன், விமர்சனக் கலை, கங்கையும் காவிரியும் புதுமைப்பித்தன் வரலாறு, ரகுநாதன் கவிதைகள், பஞ்சும் பசியும் மற்றும் பல படைப்புகளின் ஆசிரியரான சிதம்பர ரகுநாதன் (திருச்சிற்றம்பலக் கவிராயர்), பல நாவல்களைப் படைத்த திருமதி ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று சனிக்கிழமை காலை 9-30க்கு சரஸ்வதி மண்டபத்தில் புத்தக புகைப்படக் கண்காட்சியை சபாநாயகர் அல்ஹாஜ் எம். எம். பாக்கீர் மாக்கார் திறந்துவைப்பார். காலை 10மணிக்கு ஆரம்பமாகும்கருத்தரங்கை நீதியரசர் அல்ஹாஜ் அப்துல் காதர் துவக்கி வைப்பார். சனி மாலை 6-30க்கு இளங்கீரனின் 'மகாகவி பாரதி'' என்ற நாடகம் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் தொடர்ந்து புத்தக புகைப்படக் கண்காட்சி நடக்க, காலை 9-30க்கு எழுத்தாளர் சந்திப்பு இடம்பெறும்,

மாலை 4மணிக்கு புதிய சதிரேசன் மண்டபத்தில் முன்னைநாள் நீதியரசர் பேராசிரியர் எச். டபிள்யூ. தம்பையா தலைமையில் விழா தொடங்கும். அவ்விழாவில் பாரதி கவிதைகள் சிங்களமொழி பெயர்ப்பு நூலை பிரபல எழுத்தாளரும், சமூக சேவைத் திணைக்கள டைரக்டருமான வில் குணசேகரா வெளியிட்டு வைக்கவிருக்கிறார். டாக்டர் திருமதி இந்திரா சிவயோகம் பாராட்டுரை வழங்க பேராசிரியர் சுசந்த மகேந்திரா நூலாய்வைச் செய்வார்.

பாரதி நூற்றுண்டை ஒட்டி நடத்தப்பட்ட குறுநாவல், கவிதைப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசுகளையும், பாராட்டுகளையும் தினகரன் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதன், வீரகேசரி பிரதம ஆசிரியர் க. சிவப்பிரகாசம் இருவரும் வழங்கவிருக்கிறார்கள். தமிழகப் பேச்சாளர்களனைவரும்சொற்பொழிவாற்றவிருக்கும்பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும், செந்தமிழ் இயக்கத் தலைவருமான வி. பொன்னம்பலம் ஆகியோரின் பேச்சுகள் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகவிருக்கும்.

## 3தினங்கள் நடைபெறும் கரபந்தாட்ட இறுதிப் போட்டி

(வண்ணார்பண்ணை)

ஈச்சமோட்டை இளைஞர் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப்போட்டிகள் 19-ம், 20-ம், 22-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது,

இம்மாதம் 12-ம் திகதி முதல் நடைபெற்ற இக்கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி முதற்கட்ட ஆட்டங்களில் பாஷையூர் சென். அந்தனீஸ் இளைஞர் நிலையத்திற்கும், அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையத்திற்குமிடையிலான போட்டியில் சென். அந்தனீஸ் வெற்றிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் திருநெல்வேலி வை. எம். எச். எஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய புனித அந்தோனியார் கழகம் வெற்றி பெற்றது.

இப்போட்டிகளுக்குடீ. ஏ. எம். குணசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார். இப்போட்டிகளில் தொடக்க நாளன்று திரு. ஆ. க. அண்ணாமலை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

# வான் பிரயாணிகளுக்கு கத்திக்குத்து! காடையர் அட்டகாசம்!!

[துணுக்காய்]

மாங்குளத்திலிருந்து பிரயாணிகளை துணுக்காய்க்கு ஏற்றி வந்த வான் வழிமறிக்கப்பட்டு பிரயாணிகள் படுமோசமாக தாக்கப்பட்டதுடன் மூன்று பேர் கத்திக்குத்துக்குள்ளாகிய சம்பவம் வவுனிக்குளத்தில் நிகழ்ந்துள்ளது

புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் பிரயாணிகள் வான் ஒன்று மாங்குளத்திலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வவுனிக்குளத்தை வந்தடைந்தது வவுனிக்குளத்தில் அவ்வான் தரித்துநின்று பிரயாணிகளை இறக்கி ஏற்றிக்கொண்டிருந்தபோது எங்கோ மறைந்திருந்த 4 துப்பாக்கி இளைஞர்கள் திடீரென வானுக்குமுன் தோன்றி வழிமறித்து பிரயாணிகளைப் பயமுறுத்தினராம். அப்போது வானிலிருந்த சிலர் அவர்களை எதிர்க்கவே அவர்கள் கத்தியால் குத்தி காயம் விளைவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதில் வேதநாயகம் ஜெயக்குமார், வேதநாயகம் பூரசா என்னும் சகோதரர்களே கத்திக்குத்துக்கு ஆளாகினர்கள். இச்சம்பவத்தைத் தொடர்ந்து வானில் இருந்தவர்கள் அவலக்குரல் எழுப்பவே அருகில் உள்ள நீர்ப்பாசன இலாகா ஊழியர்கள் உதவிக்குவிரைந்த போது அந்த நான்கு காடையரும் அவரை கத்தியால் குத்தினராம். காடையர் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே காட்டுக்குள் ஓடிமறைந்தனர்.

இச்சம்பவம் குறித்து வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக மாங்குளம் பொலிசாரும் இராணுவத்தினரும் ஸ்தலத்துக்கு விரைந்து அயல் கிராமங்கள் காடுகளில் தேடுதல் மேற்கொண்டனர். பலர் கைதுசெய்யப்பட்டபோதிலும் விசாரணையின் பின்னர் அவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

## நாட்டுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நீலன் திருச்செல்வத்தை அவரது பாடசாலை நாட்கள்முதல் எனக்குத் தெரியும். அப்போது அவருக்கு அரசியலுக்கு வரும் நோக்கம இருக்கவில்லை. அவர் அரசியலுக்கு வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அவர் 'பட்ஜட்' விவாதத்தின் போது பயனுள்ள உரையொன்றை நிகழ்த்தினர். அவர் சபைக்கு வந்தது பயனுள்ளது. அவர் நிகழ்த்திய உரையை நாங்கள் ஆராய வேண்டியுள்ளது. அவர்சிறந்த உரையாற்றிருக்கிறார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்திருந்தால் இதைவிட சிறந்த உரையை நிகழ்த்தியிருப்பார்.

அவர் ஒரு கட்டுப்பாட்டு சூழ்நிலையில் இருந்து பேச வேண்டிய நிர்ப்பந்தத்தால் தான் அவ்வாறு பேசியிருக்கிறார். அவர் ஒரு பிராந்திய கட்சியான கூட்டணியில் இருப்பதால் அப்படி பேசவேண்டியிருந்தது. அவர் தேசிய கட்சியிலிருந்திருந்தால் சுதந்திர இலங்கை பிரஜையாக இருந்து பேசியிருப்பார்.

கூட்டணி எம். பிக்கள் எல்லோரும் இங்கு நிகழ்த்திய பேச்சு நன்றாக உள்ளது அவர்கள் திறமை மிக்கவர்கள்.

பிரதேச கட்சியில் இருப்பதால் அவர்களின் திறமை வெல்லாம் வீணாகின்றது. எங்களுடன் சேர்ந்து நாட்டை முன்னேற்ற வருமாறு அழைக்கிறேன் (க)

## அரசுடன்...

[8-ம் பக்கம் பார்க்க]

"கடந்த ஆறு ஆண்டுகளில் பன்னிரண்டு லட்சம் பேருக்கு வேலை வழங்கியதாக அரசு கூறுகிறது ஆனால் தமிழ் மக்களில் இரண்டு சத வீதத்தினருக்குக் கூட அரசு வேலை கொடுத்ததா? இந்த நிலையில் தமிழ் இளைஞர்கள் வேலை தேடி நாடு நாடாக அலைகிறார்கள். ஆனால் தமிழ் இளைஞர்கள் யுத்தம் செய்ய வருகிறார்கள் என்று நீங்கள் குறைப்படுகிறீர்கள்.

"வன்முறையை நாம் ஆதரிக்க வில்லை. ஆனால் இளைஞர்களின் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளோம்.

"ஒருவருடமாக அரசுடன் பேச்சு நடத்தினோம். ஒன்றுமே நடக்கவில்லை.

"ஜனாதிபதியின் பணிப்புரைகள்கூட நமது பகுதிகளில் செயல் படுவதாகத் தெரியவில்லை.

'உதாரணத்துக்கு வவுனியாவில் அமைக்கப்பட்டிருக்கும் புத்தர் சிலையை எடுத்துக் கொள்ளலாம். புத்தர் சிலையை அகற்றும்படி ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தும் ஒன்றுமே நடக்க வில்லை.

"நாம் பலவிதங்களிலும் பாதிக்கப் பட்டுள்ளோம். வாழ்வா சாவா எனும் நிலையில் நாம் இருக்கின்றோம்.

## மாதமின்கட்டணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகியது போல் நாம் வெளிநாட்டு உதவிகளுக்கு அடிமையாகிவிட்டோம். வெளிநாட்டு உதவிகளைப் பெற்றதும் அவற்றை ஏப்பம் விட்டோம்.

"புதிய பாராளுமன்றக் கட்டிடம் 20 கோடி ரூபா செலவில் கட்டுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டது ஆனால் கட்டிமுடிக்கக் கூடிய பணம் செலவாகியது. திட்டம் எதுவும் இல்லாததே இதற்கு காரணம் பெரும் மாளிகையாகக் காட்சிதரும் இப்பாராளுமன்றம் இன்றுள்ள பொருளாதார நிலையில் அவசியமில்லை. எம்மால் இதனை பராமரிக்க பெரும் செலவு ஏற்படும்.

"பாராளுமன்றத்திற்கு ஒரு மாதம் மின்சாரக் கட்டணமாக 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவாகிறது தண்ணீர் செலவு மாதம் 80 ஆயிரம் ரூபா இந்தச் செலவினங்களுக்காக ஆயிரக்கணக்கான குழந்தைகள் தங்கள் பாலுணவை விட்டுக்கொடுக்க வேண்டி வரும் நிலைமைச்சரை பார்த்துப் பரிதாபப்படுகின்றேன்.

## காரைநகரில் வட்டு. எம். பி.

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம், இன்றுகாலை காரை நகரில் நடைபெறவிருக்கும் பல்வேறு சமய, சமூக, கிராமமன்றங்களின் பிரதிநிதிகள் இராமேதய பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கொண்ட மகாநாட்டில் உரை நிகழ்த்தவுள்ளார்.

இம்மகாநாடு காரைநகர் நடராசா மண்டபத்தில் பிரதேச சபைத்தலைவர் திரு. ச. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. பூபாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். (மா)

## வாரியாரின் இன்றைய பிரசங்கம்

(புலோலி)

வல்லெட்டித்துறை ஸ்ரீவாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரப் பெருமான் தேவஸ்தான முன்றலில் அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் நிகழ்த்திவரும் தொடர்சங்கீதக் கதாப்பிரசங்கத்தில், இன்று மாலை 'சிவ பெருமான் கருணை' என்ற பொருளில் பிரசங்கம் இடம் பெறும்.

## இலவச---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ சேவையை நடாத்துகிறது.

கோப்பாய் கல்வி வள நிலையத்தலைவர் திரு. எஸ் கி.எஸ். சிதம்பரநாதன் வரவேற்புடன் ஆரம்பமாகவுள்ள இந்த மருத்துவச்சேவையில் கௌரவ அதிதியாக பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர் டாக்டர் யாழ். றோட்டரிக்கழகத் தலைவர் எஸ். எஸ். சேனாதிராஜா, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

கண்குழந்தை வைத்திய நிபுணர் எஸ். சண்முகலிங்கம், நரம்புசிகிச்சை நிபுணர் எஸ். குணரத்தினம் காதுதொண்டை மூக்கு நிபுணர் எஸ். ஞானரத்தினம், பல்வைத்திய நிபுணர் பி. எஸ். பாரதி தொற்று நோய் வைத்தியநிபுணர் டாக்டர் சி. விஜயராஜா, பெண்கள் மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ். எஸ். சேனாதிராஜா ஆகியோர் சேவை அளிப்பர்.

## கோண்டாவிலில்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நாளை இரவு திருமுருக கிருபானந்தவாரியார் "அருணகிரிநாதர்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார். 'சின்னமணி' கணபதிப்பிள்ளையின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெறும்.

## இப்படியும் நடக்கிறது

அந்த பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிளை ஒன்றுக்கு சொந்தமான கட்டிடம் இருக்கிறது.

ஆனாலும், பல ஆயிரம் ரூபா செலவழித்துக் கட்டப்பட்ட இக்கட்டிடம் மனித பாவனைக்கு இல்லாமல் கட்டாக்காலி மாடுகளின் 'வசந்தமாளிகை'யாகத் திகழ்கிறது- நீண்டகாலமாக!

சங்கத்தின் கிளைக்குக் கட்டிடங்கள் எக்கச்சக்கமாக இருப்பதால் அந்தக் கட்டிடம் 'அம்போ' என்று விடப்பட்டிருக்கலாம் என்று நீங்கள் கருதினால்; நாமும் ஆறுதல் அடையலாம். ஆனால் மேற்படி கிளைக்குச் சொந்தமான சங்கக்கடை ஒன்று, ஒரு தனியார் கட்டிடத்தில், அதுவும் வாடகை செலுத்தி இயங்குவதைப் பார்க்கும்போது தான்...!

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்துக்கு இது சமர்ப்பணம்!

— 'ஊடுருவி'

## உழவுயந்திரத்திற்கு சிறுவன் பலி

[மட்டுவில்]

நெல் மூடைகள் ஏற்றிய உழவு இயந்திரப் பெட்டியில் ஏறிச் செல்ல முயன்ற எட்டு வயதுச் சிறுவன் அதே உழவு இயந்திரத்திற்கு பலியானார்.

நுணாவில் கிழக்கைச்சேர்ந்த சின்னத்துரை பால சுரேஷின் மரண விசாரணையில் மேற்கண்டவிபரம் தெரியவந்தது.

சாவகச்சேரிப்பகுதி திடீர் மரணவிசாரண அதிகாரி திரு. என் தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினார்.

## மரண அறிவித்தல்

### செல்வி தனுஜா வேலுப்பிள்ளை

கைதடியைச் சேர்ந்த செல்வி தனுஜா வேலுப்பிள்ளை அகால மரணமானர். இவர் இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவியும் திரு. எஸ். வேலுப்பிள்ளை [காணி அதிகாரி கிளிநொச்சி], திருமதி சரோஜினி வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக் கிழமை (20 – 3 – 83) காலை 9 மணிக்கு கைதடியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். 6591

## மரண அறிவித்தல்

### திருமதிசெல்லம்மா மரியாம்பிள்ளை

அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா மரியாம்பிள்ளை காலமானர். இவர் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருட்திரு. வேதநாயகம் அடிகளாரின் சகோதரியும் காலஞ்சென்ற இமானுவேல் நவரத்தினம், காலஞ்சென்ற டானிஷியஸ் இராசநாயகம், எட்வேட் செல்வரத்தினம் (முன்னைநாள் கொழும்பு கொம்மேஷல் கொம்பனி), அரசரத்தினம் (காப்பாளர் இ. போ. ச. பருத்தித்துறை), பாலசிங்கம் (யாழ்ப்பாணம் ஐக்கியவியாபாரச்சங்கம்), திருமதி திரேசா அந்தோனிப்பிள்ளை இராசசிங்கம் (கி, டபிள்யூ. ஈ. கொழும்பு) செல்வி லூர்த்துமேரி ஆகியோரின் தாயாரும், திருமதி மரியமுத்து நவரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை, பாஷையூர்) திருமதி ஜெசிமேரி யோசபின் எட்வேட் செல்வரத்தினம், திருமதி மரியம்மா அரசரத்தினம், திருமதி செல்வராணி பாலசிங்கம் (ஆசிரியை டொன் பொஸ்கோ வித்தியாலயம்) திரு. ஈ ஜி, அந்தோனிப்பிள்ளை (சுகாதார அத்தியட்சகர் பணிமனை யாழ்ப்பாணம்), திருமதி சரோஜினி இராசசிங்கம் (இலங்கை வங்கி யூனியன் பிளேஸ் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாருமாவர். அன்னரின் பூதவுடல் 29, ஈச்சமோட்டை வீதி சுண்டிக்குளி யாழ்ப்பாணத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனிதசெஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு சனிக்கிழமை (இன்று) பி. ப. 4 மணிக்குஎடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள்.

(6590)


குறுகியகாலத்தில் சாதனை புரிந்தவர்கள் "டில்கா"

கண்கவர் மரத்தளபாடங்கள், கவர்ச்சியான 'மகாராஜா' செற்றிகள்,
போம் அன் றபர் செற்றிகள், கபினெட் அலுமாரிகள், கதிரைகள், கட்டில்கள்
மேசைகள் அனைத்துக்கும்

டில்கா பேணிச்சர் பலஸ் காட்சியறை

234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன் : 24186
(FREE DELIVERY WITHIN 3 MILES RADIUS)


## மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி விநாயகர் ஆலய மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம்மாதம் 27ம் திகதி இரதோற்சவமும் 28ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.